பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
18 04 2025 **FRIDAY** 7 15 **AM**
ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. தலைநகர் தில்லியில் வசிக்கும் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த தில்லி அரசுடன் இணைந்து மத்திய அரசு செயலாற்றி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்கள் தங்கள் வாழ்க்கை முறையாக யோகாவை பின்பற்ற தொடங்கியுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

3. இஎஸ்ஐ மருத்துவமனைகளின் மூலம் நாடு முழுவதும் 18 கோடி பேர் பயனடைவதாக மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

4. இயேசு பிரான் சிலுவையில் அறையப்பட்ட புனித வெள்ளி இன்று அனுசரிக்கப்படுகிறது.

5. உலக பில்லியார்ட்ஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் சௌரவ் கோத்தாரி தங்கம் வென்றார்.

>>>>>>><<<<<<<<

தலைநகர் தில்லியில் வசிக்கும் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த தில்லி அரசுடன் இணைந்து மத்திய அரசு செயலாற்றி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் இதனை தெரிவித்துள்ளார்.

யமுனை ஆற்றை தூய்மைப்படுத்துவது தொடர்பாக, தமது தலைமையில் நேற்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டம் குறித்து அவர் அப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அக்கூட்டத்தில் தில்லி மாநகரில் குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்வது குறித்து ஆலோசிக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

தில்லியில் உலக தரத்திலான உள்கட்டமைப்புகளை ஏற்படுத்தவும், மக்களின் வாழ்க்கையை எளிதாக்கவும் அரசு செயலாற்றி வருவதாக திரு. நரேந்திர மோடி அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>>><<<<<<<<

யோகாவை உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்கள் தங்கள் வாழ்க்கை முறையாக பின்பற்ற தொடங்கியுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம், **Mount Abu**-வில் பிரம்மகுமாரிகள் அமைப்பின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட மத்திய பாதுகாப்புப் படையினருக்கான தியானம் தொடர்பான நிகழ்வில் நேற்று அவர் பங்கேற்றார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், பிரம்மகுமாரிகள் அமைப்பு யோகாவின் மூலம்நல்லிணக்கத்திற்கான பணிகளை மேற்கொண்டு வருவது பாராட்டுக்குரியது என்று கூறினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் முயற்சியால், ஜூன் 21ஆம் தேதி சர்வதேச யோகா தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் தெரிவித்தார்.

உடல் மற்றும் மனநலத்துடன் உலக அமைதிக்கான சிறந்த வழியாகவும் யோகா அமைந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

பாதுகாப்புப் படையினர் சவாலான சூழ்நிலைகளில் பணியாற்றி வருவதாகவும், அவர்களது நலனில் மத்திய அரசு அதிக அக்கறையுடன் செயல்பட்டு வருவதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<<

இஎஸ்ஐ மருத்துவமனைகளின் மூலம் நாடு முழுவதும் 18 கோடி பேர் பயனடைவதாக மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

ஜார்க்கண்ட் மாநிலம், ராஞ்சியில் மேம்படுத்தப்பட்ட இஎஸ்ஐ மருத்துவமனையை நேற்று அவர் திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்த மருத்துவமனையின் மூலம் 5 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயனடைவார்கள் என்று தெரிவித்தார்.

நாடுமுழுவதும் உள்ள இஎஸ்ஐ மருத்துவமனைகளின் மூலம் 3 கோடியே 77 லட்சம் குடும்பங்களுக்கு இலவச சிகிச்சை வழங்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இஎஸ்ஐ மருத்துவமனை கட்டமைப்புகளை மேம்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக திரு. மனசுக் மாண்டவியா தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<<

அனுசந்தன் தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளை அறிவியல் ஆய்வில் தனியார் துறையின் ஒத்துழைப்பை அதிகரிக்கும் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் அறிவியல் ஆய்வு தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய அவர், புதுமை கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்க அரசு தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருவதாக தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான வளர்ச்சியை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

கடல்சார் ஆய்வு, உயிரி உற்பத்தி, செமிகண்டக்டர் ஆய்வகங்கள் போன்றவற்றில் அதிக கவனம் செலுத்தப்படுவதாகவும் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<<

இயேசு பிரான் சிலுவையில் அறையப்பட்ட புனித வெள்ளி இன்று அனுசரிக்கப்படுகிறது.

இதனையொட்டி, உலகெங்கிலும் உள்ள தேவாலயங்களில் சிறப்பு ஆராதனைகள் நடைபெறுகின்றன.

தமிழகத்தின் நாகை மாவட்டம், வேளாங்கண்ணி ஆரோக்கிய மாதா தேவாலயத்தில் நடைபெறும் சிறப்பு ஆராதனையில் பங்கேற்க, பல்வேறு மாநிலங்களிலிருந்தும் மக்கள் வந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - செல்வன்ஜெபராஜ் 39 செகண்ட்ஸ்)

கிறிஸ்தவர்கள் அதிகம் வசிக்கும் நாகாலாந்து மாநிலத்தில் புனித வெள்ளியை ஒட்டி, சிறப்பு ஆராதனைகளும், பிரார்த்தனைகளும் நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தலைநகர் கோஹிமாவில் சிலுவை ஊர்வலங்கள் நடைபெறுகின்றன.

>>>>>>><<<<<<<<

உலக பாரம்பரிய தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

பேரிடர்கள் மற்றும் மோதல்களிலிருந்து பாரம்பரிய சின்னங்களை பாதுகாத்தல் என்ற கருப்பொருளில் இந்த ஆண்டு இந்த தினம் கடைபிடிக்கப்படுகிறது.

நாடுமுழுவதும் உள்ள 43 இடங்கள் ஐ.நாவின் யுனெஸ்கோ அமைப்பால் பாரம்பரிய சின்னங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த தினத்தை ஒட்டி, மத்திய தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் உள்ள பாரம்பரிய சின்னங்களை பார்வையிட, இன்று மட்டும் நுழைவுக் கட்டணம் ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது

நாட்டின் வளமான கலாச்சார பாரம்பரியத்தை மக்கள் இந்த தினத்தில் அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய கலாச்சார அமைச்சகம்கூறியுள்ளது.

>>>>>>><<<<<<<<

தேசிய தீயணைப்பு சேவை வாரம் கடந்த 14ஆம் தேதி முதல் 20ஆம் தேதிவரை கடைபிடிக்கப்படுவதை ஒட்டி, நாடுமுழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தின் செங்கல்பட்டு மாவட்டத்தில் மத்திய தொழில் பாதுகாப்புப் படை சார்பில், தீ விபத்து மீட்பு ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சுரேகா 50 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<<

அமிர்த நீர்நிலைகள் இயக்கத்தின் கீழ் நாடு முழுவதும் இதுவரை 68 ஆயிரம் நீர்நிலைகள் அமைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ், 46 ஆயிரம் நீர் நிலைகள் அமைக்கப்பட்டுள்ளதாக ஊரக வளர்ச்சித்துறை கூறியுள்ளது.

இதன் மூலம் நீர் வளம் அதிகரித்துள்ளதுடன், நிலத்தடி நீரின் அளவு உயர்ந்துள்ளதாக ஊரக வளர்ச்சி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<<

கோடை காலம் தொடங்கியிருப்பதை அடுத்து, கோடை வாசஸ்தலங்கில் சுற்றுலாப் பயணிகள் குவியத் தொடங்கியுள்ளனர்.

இந்நிலையில், தொடர் விடுமுறையை ஒட்டி, தமிழகத்தின் கொடைக்கானலுக்கு பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த மக்கள் வந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ராஜசேகரன் 40 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<<

உலக பில்லியர்ட்ஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் சௌரவ் கோத்தாரி தங்கம் வென்றார்.

அயர்லாந்தில் நடைபெற்ற இப்போட்டியில் இந்தியாவின் பங்கஜ் அத்வானி வெள்ளிப்பதக்கத்தையும், **Dhru Sitwala** வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

>>>>>>><<<<<<<<

விளையாட்டு வீரர் வீராங்கனைகளின் ஊக்க மருந்து பயன்பாடு குறித்து கண்டறிய அவர்களது ரத்த மாதிரி உள்ளிட்டவற்றை குறிப்பிட்ட காலத்திற்குள் சேகரிக்கும் மேலாண்மைப் பிரிவை புதுதில்லியில் மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா நேற்று தொடங்கி வைத்தார்.

இதன்மூலம், இப்பிரிவை ஏற்படுத்தும் 17வது நாடாக இந்தியா அமைந்துள்ளது என விளையாட்டு அமைச்சகம் கூறியுள்ளது.

>>>>>>><<<<<<<<

தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற சர்வதேச ஈட்டி எறிதல் போட்டியில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா தங்கப்பதக்கம் வென்றார்.

ஆறு பேர் பங்கேற்ற இப்போட்டியில் இவர் அதிகபட்சமாக 84 புள்ளி ஐந்து இரண்டு மீட்டர் தூரத்திற்கு ஈட்டி எறிந்து இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>>>>END<<<<<<<<